பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை 23.09.2025 கதிர் 317

**இனி இது ரகசியம் அல்ல!**

மாகாண சபைத் தேர்தலை ஆளும்தரப்புஉடன்நடத்தவேண்டும் என்று எதிர்க் கட்சிகளும் ஏனைய தரப்புக்களும் அண்மைய நாட்களாகத் தீவிர அழுத்தம் ☞2

### போலித் தகவல்களை வழங்கியதற்காக

# அநுரவும் அமைச்சர்களும் சிறை செல்லவேண்டி வரும்



### உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

**சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களில் போலியான விடயங்களை உள்ளடக்குதல், உண்மையை மறைத்தல் ஆகிய குற்றங்களுக்காக அரசுத் தலைவர் உட்பட ஆளும்தரப்பின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எதிர்காலத்தில் சிறைக்குச் செல்ல நேரிடும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

**கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில்** ☞2

## எதிர்க் கட்சிகளின் இணைவு கண்டு ஆளும்தரப்பினர் பெரும் அச்சத்தில்

### தயாசிறி எம்.பியின் கணிப்பு இது

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய மாநாட்டில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பங்குபற்றியதைக் கண்டு ஆளும்தரப்பு அச்சமடைந்துள்ளது. ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படும் ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டங்களுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். ஆனால் அந்தப் போர்வையில் எமது குரலை ஒடுக்க முற்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டாது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. விடுக்கப்பட்ட அழைப்பிற்கமையவே நாம் அவற்றில் பங்கேற்றிருந்தோம். ஆனால் ஆளும்தரப்பு அதைக் கண்டு அஞ்சுகிறது. அதனால்தான் கள்வர்கள் அனைவரும் ஒன்றிணைந்து விட்டனர் என்று கூறுகின்றனர். ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படும் ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டங்களுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எம்முள் இருந்தால் அவர்களையும்கைதுசெய்யுங்கள். அவர்களுக்கெதிராக ☞6

# தங்காலையில் நேற்று 600 கிலோ 'ஐஸ்' போதைப் பொருள் சிக்கியது

தங்காலை சீனிமோதர மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பொலிஸார் முன்னெடுத்தசுற்றிவளைப்புக்களில்ஐஸ்மற்றும் ஹெரோயின்உள்ளிட்டசுமார்600கிலோகிராம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றி வளைப்புக்களின்போதுதுப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரு தசாப்தங்களாக நாட்டில் போதைப்பொருளுடன் தொடர்புடைய மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் அதிகரித்துச்செல்லும் போக்கே காணப்படுகிறது. இவற்றுடன் நேரடியாக அரசியல் ரீதியான தொடர்புகள் காணப்பட்டன என்பது அனைவரும் அறிந்த காரணியாகும். எனினும் இது மேலும் நீடிப்பதை தடுப்பதற்கு ஆளும்தரப்பு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

அதன் பிரதிபலனாக இந்த நடவடிக்கைகளைகுறிப்பிட்டமட்டத்தில் கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக வெளிநாடுகளில் தலைமறைவாக இருந்த பாதாள உலகக்குழுக்களுடன் தொடர்புடைய முதன்மை சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்களிடம்முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளில்பல்வேறுதகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றுடன் தொடர்புடைய புலனாய்வு தகவல்கள் தொடர்ச்சியாக கிடைக்கப் பெறுகின்றன.

அதற்கமைய தென் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புக்களில் சுமார் 600 கிலோ கிராம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய 245 பக்கட்டுக்களும், ஐஸ்போதைப் ☞2

## அமெரிக்கா புறப்பட்டார் அநுர நாளை ஐ.நா. கூட்டத்தில் உரை

அமெரிக்காவிற்குஅரசமுறைப்பயணமாகச் சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது கூட்டத்தொடரில் நாளை உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தில் கலந்துக்கொள்வதற்காக அரசுத் தலைவர் அநுரகுமார நேற்றிரவு ☞2

### 4 நாள் பயணமாக

# இந்திய கடற்படைத் தளபதி நேற்றுக் கொழும்பு வருகை

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி, நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று திங்கட்கிழமை நாட்டை வந்தடைந்தார். இந்திய கடற்படை தளபதி இப்பயணத்தின்போது பிரதமர் ஹரிணி, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கஞ்சன பனாகொட உட்பட பல முக்கிய தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களில் கடல்சார் ☞2

## கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களுடன் தெற்கு அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு

தெற்கு மாகாணத்தில் நேற்றைய தினம் மாத்திரம் ஐஸ், ஹெரோய்ன் உள்ளடங்களாக 600 கிலோகிராம் போதைப்பொருட்கள் கைப்பற்றபட்டுள்ளன. இந்த போதைப்பொருள்களுக்கும், தெற்கு மாகாண அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது. போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்கள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கவேண்டும். வழங்கப்படும்தகவல்களின்இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்என்றுபொதுமக்கள்பாதுகாப்பு மற்றும்நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

# மகிந்த, நாமல், ஷிராந்தி மீது சொத்து குவிப்பு முறைப்பாடு

### இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில்

முறையற்றசொத்துச்சேகரிப்புமற்றும் அரச நிதி முறைகேடாக பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் ஷிராந்தி ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள்அமைப்புஇலஞ்சம்அல்லதுஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார நேற்று ☞6

## ஆட்சியாளர்களின் மிரட்டல்களுக்கு ஒருபோதும் அச்சப்படமாட்டோம்

### மின்சார சபை தொழிற்சங்கம் தெரிவிப்பு

வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டு, மின்சாரசபை ஊழியர்களுக்கு அழுத்தம் கொடுக்கவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. வர்த்தமானி மூலம் மின்சார சபை ஊழியர்களை அச்சுறுத்த முடியாது. அதற்கு நாங்கள் அச்சப்படப்போவதில்லை என இலங்கை மின்சாரசபை சுதந்திர சேவை சங்கத்தின் முதன்மை செயலாளர் பிரபாத் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொடுத்து வருகின்றன. ஆளும்தரப்புக்கு இந்தத் தேர்தலில் பின்னடைவு ஏற்படும் என்கிற அச்சம் காரணமாகவே, முன்னர் உறுதியளித்தது போன்று தேர்தலை நடத்தாமல் காலம் இழுத்தடிக்கப்படுகின்றது என்றும் சொல்லப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த வாரம், பல தெற்கு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக தளங்களில் ஆளும்தரப்பு மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயாராகி வருவதாக செய்தி வெளியாகின. ஆனால் அந்தச் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என்று தெரிகிறது.

அடுத்த ஆண்டு நடுப் பகுதிவரையும் தேர்தலை நடத்தும் திட்டம் எதுவும் இப்போது ஆளும்தரப்பிடம் இல்லை என்பது உறுதியாகத் தெரிகிறது. அதன் பிறகு? அது குறித்து இப்போதைக்கு எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து அரசாங்க அணிகளுக்குள் புதிய விவாதங்கள் இப்போது எழுந்துள்ள நிலையில், இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி இந்தியா அழுத்தம் கொடுத்தாலென்ன, உள்நாட்டில் எதிர்க் கட்சிகள் அழுத்தம் கொழுத்தாலென்ன எதற்கும் மசிந்து கொடுப்பதில்லை, இப்போதைக்கு மாகாண சபைத் தேர்தல் இல்லை என்பதே ஆளும்தரப்பின் நிலைப்பாடு.

.............................................

மன்னாரில் காற்றாலைகள் அமைக்கப்படுவதற்குஎதிராக 50 நாள்களுக்கும் மேலாக மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். காற்றாலைகளை அமைப்பதற்குத் தேவையான பொருள்கள் மன்னாருக்கு எடுத்து வரப்பட்ட நிலையில் அந்த வாகனங்களை மறித்து மக்கள் போராட்டங்களை நடத்தியதால், காற்றாலை அமைக்குப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தும்படி அரசுத் தலைவர் அநுர உத்தரவிட்டிருந்தார்.

இது விடயத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கவென அரசுத் தலைவர் ஒரு குழுவையும் நியமித்திருந்தார். அந்தக் குழுவினர் விடயங்களை ஆராய்வதற்குப் பதில் காற்றாலைகளை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கான மூளைச் சலவை செய்வதிலேயே கவனம் செலுத்தியிருந்தனர். இந்த நிலையில், காற்றாலை அமைக்கும் பணிகளை மீண்டும் தொடங்கவும் திட்டமிட்டபடி சீலெக்ஸ் மற்றும் ஹேலிஸ் நிறுவனங்களால் அமைக்கப்படவுள்ள 14 காற்றாலைகளை நிறுவவும் அரசுத்தலைவர் அனுமதி வழங்கிவிட்டார் என்று தெரிகிறது.

பதவிக்குவருவதற்கு முன்னர் மன்னாரில் வலசைவரும் பறவைகளுக்கு இடையூறாக இந்தக் காற்றாடிகள் இருக்கின்றன என்று சுற்றுச் சூழலியலாளர்கள் எழுப்பிய குற்றச்சாட்டின் அடிப்படையில் தாம் பதவிக்கு வந்தால் இந்தத் திட்டங்களை நிறுத்துவோம் என்று வாக்குறுதியளித்திருந்தார். அநுர. இப்போது அந்த வாக்குறுதியைக் கடாசிவிட்டு, காற்றாலைகளை அமைப்பதற்கும் அதற்குத் தடையாக யாராவது செயற்பட்டால் அவர்கள் மீது பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தரவிட்டிருக்கின்றார் என்று அறிய முடிகிறது.

இதனால் விரைவில் மன்னாரில் கொந்தளிப்பான நிலை ஏற்படும் என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அநுரவும்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய விரங்களைவெளிப்படுத்துவதற்காகநாங்கள் கொண்டு வந்த 2023ஆம் ஆண்டு 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தால் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆளும்தரப்பு பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இதற்கு முன்னரான சட்டத்தில் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரங்களை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாகவே பகிரங்கப்படுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் நாங்கள் இயற்றிய ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் குறித்த விடயங்களை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழு வெளிப்படுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை தேசிய மக்கள் தலைமையிலான ஆளும்தரப்பின் தலைவர்கள் அறியவில்லை.

இந்தச்சட்டத்தின் ஊடாகதமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்த நேரிடும் என்று தேசிய மக்கள் சக்தியினர் கடந்த காலங்களில் அறிந்திருக்கவில்லை. 2024 ஏப்ரல் மாதம் முதல் 2025 மார்ச் மாதம் வரையிலான காலத்தை வரையறுத்து சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய விபரங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரசுத் தலைவர் அநுரகுமார 2024 ஜீன் மாதம் பிரித்தானியாவுக்கு சென்றிருந்தார். இந்த பயணத்துக்கான செலவு விவரங்கள் அரசுத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களில் குறிப்பிடப்படவில்லை. அதேபோல் 2024 ஆம் ஆண்டு அரசுத் தலைவர் அநுரகுமார மக்கள் ஜேவிபியின் தலைவர் என்ற அடிப்படையில் இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்திருந்தார். இந்தப் பயணங்களுக்கான செலவு விவரங்கள் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 8(2) பிரிவில் தமக்கு பரிசாகவோ அல்லது வேறு வழிமுறைகளிலோ ஏதேனும் சலுகைகள் கிடைக்கப்பெறுமாயின் அதன் விவரங்களையும் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவர திரட்டில் உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அரசுத் தலைவர் அநுரகுமார தனக்கு பரிசாகவோ அல்லது வேறு வழியில் கிடைக்கப்பெற்ற சலுகைகளையோ வெளிப்படுத்தவில்லை.

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களில் போலியான விடயங்களை உள்ளடக்குதல் அல்லது விடயங்களை மறைத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். ஒருவரின் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவர திரட்டில் உள்ளடக்கப்படாத சொத்து அவருக்கு உரிமையானதாக இருந்தால் அதனை அரசுடமையாக்க முடியும். உண்மைத் தகவல்களை மறைத்தால் ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்படும் அல்லது ஒரு வருடகால சிறைதண்டனை விதிக்கப்படும்.

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களில் போலியான விடயங்களை உள்ளடக்கல், உண்மையை மறைத்தல் ஆகிய குற்றங்களுக்காக அரசுத் தலைவர் உட்பட ஆளும்தரப்பின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எதிர்காலத்தில் சிறைக்குச் செல்ல நேரிடும்.

அரசுத்தலைவர் அநுரகுமார ஒருவருடகால ஆட்சியில் நாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசியல் பழிவாங்கல்கள் மாத்திரமே முன்னிலையில் உள்ளன - என்றார்.

## இந்திய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு, திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகள் உட்பட பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான பல விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர் 'மாறும் இயக்கவியலின் கீழ் இந்தியப் பெருங்கடலின் கடல்சார் நோக்குநிலை' என்ற கருப்பொருளில் கொழும்பில் நடைபெறவுள்ள 12ஆவது காலி உரையாடல் 2025 - சர்வதேச கடல்சார் மாநாட்டிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

வருடாந்த பாதுகாப்புக் கலந்துரையாடல், பணியாளர்கள் பேச்சுக்கள் மற்றும் இலங்கை-இந்தியா கடற்படைப் பயிற்சி மற்றும் நீரியல் பரிமாற்றங்கள் உள்ளிட்ட பிற செயல்பாட்டு நடவடிக்கைகள் மூலம் இந்தியக்கடற்படை இலங்கைகடற்படையுடன் தொடர்ந்து இணைந்து செயற்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படை தளபதியின் இவ்பயணமானது பரஸ்பர மரியாதை, கடல்சார் நம்பிக்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி மற்றும் உறுதிப்பாட்டுக்கான பகிரப்பட்ட பார்வை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த, இந்தியா-இலங்கை உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்துவதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## தங்காலையில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் அடங்கிய 390 பக்கட்டுக்களும் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இல 43 கொடம்ப, கஹாவத்துரகொட சீனிமோதர, நாகொழுகம என்ற முகவரியில் வசிக்கும் இருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய குறித்த பகுதியிலிருந்த சிறிய பாரவூர்தியொன்றிலிருந்து 10 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நபர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்த பிரிதொரு நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்தன. தினுக லக்ஷான் ஹேவாவிதாரன மற்றும் விக்ரமஎதிரிசூரிய கவிந்து ஆகியோரே இவ்வாறு சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த நபர் வெநுர குமார என்பவராவார். இந்த மரணங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்கள்தவிர அதேஇடத்திலிருந்த பிரிதொரு நபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. தப்பிச் சென்றவர் தொடர்பிலும் தங்காலை பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொடக்ககட்ட விசாரணைகளுக்கமைய குறித்த இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் தங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியொன்றிலிருந்து துப்பாக்கிகள் மற்றும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போது கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருள் தொகையில் 100 பக்கட்டுக்களில் 100 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் 80 பக்கட்டுக்களில் 100 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளும் குறித்த பாரவூர்தியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலும் ரி 56 ரக துப்பாக்கி, 5 ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் தொடர்பில் பொது மக்களுக்கு ஏதேனும் தகவல்கள் கிடைக்கப் பெற்றால் அவற்றை பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## கைப்பற்றப்பட்ட .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கடந்த இரண்டு, மூன்று தசாப்த காலமாக போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பதாள குழு செயற்பாடுகள் ஆகியவற்றுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் நேரடி தொடர்பு காணப்பட்டுள்ளது. இதுவொன்றும் இரகசியமல்ல.

தெற்கு மாகாணத்தில் நேற்றைய தினம் மாத்திரம் 245 ஹெரோய்ன் பக்கட்டுகள், 635 ஐஸ் போதைப்பொருள் பக்கட்டுக்கள் உள்ளடங்களாக 600 கிலோ கிராம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தங்காலை சீனிமோதர பகுதியில் உள்ள வீட்டில் இரண்டு பேர் சந்தேகத்துக்கிடமாக உயிரிழந்ததை தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்ட பரிசோதனையில் வீட்டு வளாகத்தில் இருந்த பாரவூர்தியில் இருந்து 10 கிலோகிராம் ஐஸ்போதைப்பொருள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தவீட்டில் உயிரிழந்தவர்கள் சீனிமோதர பகுதியை சேர்ந்த தினுக லக்ஷான், கவிந்து கல்ஹாரஎன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் உயிரிழந்தவர் வெனுர குமார என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பாரவூர்தி ஒன்றில் இருந்து பெருமளவிலான ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள் தொகை மீட்கப்பட்டுள்ளன. அதேபோல் ரி 56 துப்பாக்கிகளும், தோட்டாக்களும் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ள. இந்த போதைப்பொருள் தொகை மற்றும் ஆயுதங்களுடன் தொடர்புடையதாக சந்தேகநபர் ஒருவர் தங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்துக்கிடமான முறையில் 3 பேர் உயிரிழந்தமை மற்றும் பெருந்தொகையான போதைப்பொருள் தொகை மற்றும் ஆயுதங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டமை தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தெற்கு மாகாணத்தில் நேற்றைய தினம் மாத்திரம் ஐஸ், ஹெரோய்ன் உள்ளடங்களாக 600 கிலோகிராம் போதைப்பொருட்கள் கைப்பற்றபட்டுள்ளன. இந்த போதைப் பொருள்களுக்கும், தெற்கு மாகாண அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது. போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்கள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டும். வழங்கப்படும் தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்.

வெளிநாடுகளில் இருந்தவாறு இலங்கையின் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள குழு நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்தியவர்களில் முதன்மைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிடம் தற்போது முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது. வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள பெரும்பாலானவர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றார்.

## ஆட்சியாளர்களின்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரியன்த தெரிவித்தார்.

மின்சாரம் வழங்கல் தொடர்பான அனைத்துச் சேவைகளையும் அத்தியாவசிய சேவையாக அறிவித்து அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரம் அத்தியாவசிய சேவை அல்ல என்றே ஆளும்தரப்பு நினைத்துக்கொண்டு இருக்கிறது என்றே நாங்கள் நினைத்துக்கொண்டிருந்தோம். இது அத்தியாவசிய சேவை என்றால், ஆளும்தரப்பு ஏன் மின்சார சபையை பல துண்டுகளாக பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் மின்சாரசபையை தனியார் மயப்படுத்த வழி அமைக்கவேண்டும் என கேட்கிறோம்.

வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டு, மின்சாரசபை ஊழியர்களுக்கு அழுத்தம் கொடுக்கவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. இலங்கை மின்சார சபையில் இருப்பது, ஆளும்தரப்பின் வர்த்தமானி அறிவிப்புக்கு அஞ்சி, தொழிற்சங்க போராட்டங்களில் இருந்து பின்வாங்கக்கூடிய தொழிற்சங்கங்கள் அல்ல என்பதை ஆளும்தரப்புக்கு தெரிவித்துக்கொள்கிறோம். அதனால் வர்த்தமானி மூலம் எங்களை அச்சுறுத்த முடியாது. அதற்கு நாங்கள் அச்சப்படப்போவதில்லை.

அதேநேரம் 46 வருடங்களுக்கு முன்னர் ஜேஆர். கொண்டுவந்த சட்டத்தை, இன்று அரசுத் தலைவர் அநுரகுமார, மின்சாரசபை ஊழியர்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தி இருக்கிறார். தொழிலாளர்களின் வாக்குகளால் அதிகாரத்துக்கு வந்த அரசுத் தலைவர் உள்ளிட்ட ஆளும்தரப்பு, இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நாங்கள் நினைக்கவில்லை.

அதேபோன்று இந்த அத்தியாவசிய சேவைச் சட்டத்தை கடந்த ஆளும்தரப்புகள் பயன்படுத்தும்போது, இது அடக்குமுறைக்கான சட்டம். தொழிற்சங்க போராட்டங்களை சுருட்டிக்கொள்ளும் சட்டம் என்றே தெரிவித்தார்கள். தற்போது இந்தச் சட்டத்தை இவர்களும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை பயன்படுத்தி, இராணுவத்தை கொண்டுவரவே ஆளும்தரப்பு திட்டமிட்டு வருகிறது என்றார்.

## அமெரிக்கா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். அரசுத் தலைவருடன் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் உட்பட அயலுறவுத்துறை அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளும் சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில் நாளை புதன்கிழமை (24) அமெரிக்க நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு (இலங்கை நேரப்படி அதிகாலை 12 மணியளவில்) அரசுத்தலைவர் அநுரகுமார உரையாற்றவுள்ளார்.

இந்த பயணத்தின் போது, அரசுத் தலைவர் அநுரகுமார ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க பயணத்தை நிறைவு செய்ததன் பின்னர் அரசுத் தலைவர் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வரி செலுத்தத் தவறிய காரணத்தை சஜின்வாஸ் எழுத்துமூலம் தர உத்தரவு

## கொழும்பு நீதிவான் பிறப்பித்தார்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ்குணவர்தனஅரசுக்குச்செலுத்த வேண்டிய 369 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமான வரி தொகையை செலுத்தாமைக்கு காரணங்கள் ஏதும் இருப்பின் அதற்கான எழுத்து பூர்வ அறிக்கையை டிசெம்பர் 16, 2025 அன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சஜின் வாஸ் குணவர்தன மீதான வருமான வரி செலுத்தாமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஓசித மிகார மஹராச்சி தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இவ்வாறு உத்தரவிட்டார்.

2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஆளும்தரப்புக்குச் செலுத்தவேண்டிய 36,975,959 ரூபா தனிநபர் வருமான வரியை செலுத்தாத குற்றச்சாட்டில் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக உள்நாட்டு இறைவரித் துறை ஆணையாளரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சஜின் வாஸ் குணவர்தன நேற்று வழக்கு விசாரணைகளுக்காக மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது பிரதிவாதியான சஜின் வாஸ் குணவர்தன தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி ஜீவந்த ஜயதிலக்க தனது கட்சிக்காரருக்கு எதிராக உள்நாட்டு இறைவரித்துறை ஆணையாளரால் நீதவான்நீதிமன்றத்தில்தாக்கல்செய்துள்ள வழக்குக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு செப்டெம்பர் 26 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான வழக்கு விசாரணையும் இடம்பெற உள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

உள்நாட்டு இறைவரித்துறை ஆணையாளர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்தினேஷ்பெரேரா, இந்தவழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம் இதுவரை எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. ஆகையால் நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கைத் தொடர்வதற்கு எந்தத் தடையும் இல்லை என தெரிவித்திருந்தார்.

இரு தரப்பு சாட்சியங்களையும் கருத்திற்கொண்ட கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஓசித மிகார மஹராச்சி, சஜின் வாஸ் குணவர்தன அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய 369 இலட்சம்ரூபாவுக்கும்அதிகமானவருமான வரி செலுத்தாமைக்கு காரணங்கள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான எழுத்து பூர்வ அறிக்கையை எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டார்.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒருங்கிணைப்பா? சுயாட்சியா? எது இலங்கைக்கு பயனுள்ளது?

இலங்கையின் பொருளாதாரத்தில் கடற்றொழில்துறை, குறிப்பாக மீன்பிடித்துறை, மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. கடல்சார் வளங்கள் மட்டுமல்லாது, உள்நாட்டு நீர்நிலைகளின் வளங்களும் மக்களின் உணவுப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, மற்றும் ஏற்றுமதித் திறன் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, இந்தத் துறையை திறம்பட முன்னேற்றுவது, தேசிய உற்பத்தித் திறனையும் பொருளாதார வளர்ச்சியையும் உயர்த்துவதில் அவசியமானதாகும்.

ஆனால் இது விடயத்தில் சமீபத்தில் வெளிப்பட்ட விவகாரங்களில் ஒன்று, மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்புக் குறைபாடு. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில், அமைச்சர் சந்திரசேகரனே இதனை வெளிப்படையாகக் குறிப்பிட்டார். மத்திக்கும் மாகாணங்களுக்கும் இடையில் ஒருங்கிணைப்பு இல்லாமையின் விளைவாக வளங்கள் வீணடிக்கப்படுவதோடு, திட்டங்களின் வினைத்திறனும் குறைகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

இது புதிய குற்றச்சாட்டு அல்ல. மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட நாள் முதல், அதிகாரப் பகிர்வு குறித்த குழப்பம் நிலைத்திருக்கிறது. ஒரு பக்கம் மத்திய அரசு, தேசிய அளவில் திட்டமிடல் அவசியம் என வலியுறுத்துகிறது. மறுபக்கம், மாகாண சபைகள், தமக்குச் சொந்தமாக ஒதுக்கப்பட்ட துறைகளில் சுதந்திரமாக செயல்பட உரிமை கேட்கின்றன. இந்த இருதரப்புப் புரிதல் பிழை, ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான நிதிகளை வீணாக்குகின்றது.

பிரதி அமைச்சர் ரத்ன கமகே, கூட்டத்தில் உரையாற்றுகையில், 'மாகாண சபை, மத்திய அரசு என்ற பேதமின்றி, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும்' என்று வலியுறுத்தினார். அவர் குறிப்பிட்டது போலவே, வளங்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதே அடிப்படைத் தேவையாகும். ஆனால் அதற்கு அடிப்படை முன்னிலை – மத்திய அரசின் தலையீடின்றி, மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக மதிப்பதே ஆகும்.

மாகாண சபைகளுக்குப் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தால், திட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் அவர்கள் சுயமாக இயங்க அனுமதிக்கப்படவேண்டும். மத்திய அரசு வழிகாட்டியாக மட்டுமே இருக்கவேண்டும். ஆனால் கடந்த பல ஆண்டுகளில் நடைமுறையில் மத்திய தலையீடு மாகாணங்களின் செயற்பாட்டில் அதிகமாகும் நிலையே காணப்படுகின்றது. மாகாணங்களின் அதிகாரங்களைத் தமதாக்குவது, அல்லது மகாணங்களுக்குரியவற்றை மத்தியின் கட்டுப்பாட்டுக்குள் புதிய சட்டங்கள் மூலம் கொண்டுவருவது என்பதிலேயே மத்தி குறியோடு இருந்திருக்கிறது. மத்திய அமைச்சகங்கள் தங்களின் திட்டங்களை நேரடியாக மாகாண மட்டத்தில் திணிக்கின்றன. இதனால், மாகாண சபைகளின் கருத்துக்கள் இதுவிடயத்தில் புறக்கணிக்கப்படுகின்றன. இதுவே வள வீணாவதற்கான அடிப்படைக் காரணம்.

கடற்றொழில்துறை போன்ற துறைகளில், உள்ளூர் உண்மை நிலையை அறிந்திருப்பவர்கள் மாகாண மட்ட அதிகாரிகளே. எந்தக் கிராமத்தில் மீன்பிடி உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்? எந்தக் குளத்தில் நன்னீர் மீன்பிடி வளர்த்தல் சாத்தியம்? எந்தக் கரையோரத்தில் கப்பல்கள் தங்கும் வசதி அவசியம்? போன்ற கேள்விகளுக்குப் பதில் மாகாண மட்ட அதிகாரிகளிடமே உள்ளது. ஆனால் மத்திய மட்டத்தில் இருந்து வரையப்படும் திட்டங்கள் நிலத்தின் உண்மை நிலைக்கேற்ப அமையாவிட்டால், நிதியும் நேரமும் வீணாகின்றன.

இதனால், இந்தத் துறையில் முன்னேற்றம் காண விரும்பினால், முதலில் செய்ய வேண்டியது – மாகாண சபைகளின் சுயாட்சி உரிமையை மதிப்பது ஆகும். மத்திய அரசு ஒருங்கிணைப்பை மேற்கொள்ளலாம்; ஆனால் அது கண்காணிப்பு மற்றும் ஆதரவு அளவிலேயே இருக்கவேண்டும். திட்டங்களை வடிவமைக்கும் அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டும். மத்திய அரசு நிதியுதவி, தொழில்நுட்ப ஆதரவு, சர்வதேச தொடர்புகள் போன்ற துறைகளில் பங்கு வகிக்கலாம்.

இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலம் 'உற்பத்தி சார்ந்த வளர்ச்சி' என்று அரசியல்வாதிகள் வலியுறுத்தும் போதெல்லாம், மீன்பிடி மற்றும் கடற்றொழில்துறை குறித்தும் பேசப்படுகிறது. ஆனால் அவை வெறும் முழக்கங்களாக மாறாமல், நடைமுறையில் விளைவுகளை ஏற்படுத்தவேண்டும். அதற்கான முதல் படி – வளங்களை வீணாக்கும் மத்திய – மாகாண மோதலை நிறுத்துவது.

எனவே, ஒருங்கிணைப்பு என்ற பெயரில் மத்திய தலையீட்டை அதிகரிப்பதை விட, சுயாட்சி என்ற அடிப்படையில் மாகாணங்களின் அதிகாரங்களைமதித்து, இருதரப்புநம்பிக்கையை உருவாக்குவதுதான் சரியான பாதையாகும். அப்படிச் செய்யாவிட்டால், மேலும் பல ஆண்டுகள் வளங்கள் வீணாவதோடு, மீனவர் சமூகங்களின் வாழ்க்கையும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

# டக்ளஸ் தேவானந்தா சொத்து விவரம் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை

## லஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவிப்பு

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட இராஜாங்க அமைச்சர் ஐவரும், முன்னாள் ஆளுநர்களான செந்தில் தொண்டமான், நவீன் திஸாநாயக்க, ரொஷான் குணதிலக, மற்றும் விலியம் கமகே ஆகியோர் குறித்த காலப்பகுதியில் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்கவில்லை என்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதியன்று 2024 ஆம் ஆண்டுக்கான சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்காதவர்களின் பெயர் விபரங்களை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த பெயர் பட்டியலில் முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர் ஆறு பேர், முன்னாள் மாகாண ஆளுநர்கள் நால்வர், முன்னாள் தூவர்கள் 29 பேர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 2 நீதியரசர்கள் உள்ளடங்குகின்றனர்.

குடந்த கடந்த ஆளும்தரப்பின் கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்த டக்ளஸ் தேவானந்தா சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை குறித்த காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவில்லை.

அத்துடன் முன்னாள் இராஜாங்க அமைச்சரான (காலஞ்சென்ற) லொஹான் ரத்வத்தே, மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, சாந்த பண்டார, காதர் மஸ்தான், பிள்ளையான் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவில்லை.

அத்துடன் முன்னாள் மாகாண ஆளுநர்களான ரொஷான் குணதிலக, செந்தில் தொண்டமான், நவீன் திஸாநாயக்க மற்றும் விலியம் கமகே ஆகியோரும் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவில்லை என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# இந்த ஓராண்டு ஆட்சிக் காலத்தில் என்.பி.பி. வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கண்டியில் குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்து ஓராண்டு நிறைவடைந்துள்ளது. ஆனால் மக்களுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. கடன் மறுசீரமைப்பின் ஊடாக எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கமைய 2028 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டுக் கடன்களை மீள செலுத்த வேண்டும். இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு ஆளும்தரப்பிடம் எந்தவொரு திட்டமிடலும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்து ஓராண்டு நிறைவடைந்துள்ளது. 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் முதல் ஒரு வருடம் என்பது எந்தவொரு ஆளும்தரப்புக்கும் முக்கியத்துவம் வாய்ந்தத. இந்தக் காலப்பகுதியில் தேர்தல்களின்போது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கே ஆளும்தரப்பு முன்னுரிமையளிக்கவேண்டும். ஆனால் இந்த ஒரு வருடத்துக்குள் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும், அரசுத் தலைவர் அநுரகுமாரவும் நாட்டு;க்காக என்ன செய்திருக்கின்றனர்?

நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை அறிந்து இவர்கள் செயற்படுகின்றனரா என்பதே தற்போது அனைவரும் கேட்கும் கேள்வியாகும். கடன் மறுசீரமைப்பின் ஊடாக எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கமைய 2028ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டுக் கடன்களை மீள செலுத்தவேண்டியதே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள முக்கிய சவாலாகும். அதற்காக 2027ஆம் ஆண்டிலிருந்து 2048ஆம் ஆண்டு வரை கடனை மீளச் செலுத்தலுக்கான டொலர் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியது பெரும் சவாலாகும்.

தொடக்கத்திலேயே 5.5 பில்லியன் டொலர் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை முதன்மைத் தேவையாகக் கருதி ஆளும்தரப்பு தீர்மானங்களை எடுத்துள்ளதா? இந்த முதல் ஆண்டில் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் ஆளும்தரப்பால் எடுக்கப்படவில்லை. ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், அந்நியச் செலாவணியை அதிகரித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் உள்ளிட்டவற்றில் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், அவர்களால் கிடைத்துள்ள வருமானத்தில் எவ்வித அதிகரிப்பும் இல்லை. வரிச் சலுகை வழங்குவதாகவும், மின் கட்டணத்தை குறைப்பதாகவும், எரிபொருட்களின் விலைகளை குறைப்பதாகவும் அடுக்கடுக்காக வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் தற்போது வெளியாகியுள்ள அமைச்சர்களின் சொத்து விவரங்கள் ஊடாக தேசிய மக்கள் சக்தி மீதான வெறுப்பு மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.

நிறைவடைந்துள்ள ஓராண்டைப் போலவே எஞ்சியுள்ள 4 ஆண்டுகளும் ஆளும்தரப்பால் எதுவும் செய்யமுடியாது. மக்களின் எதிர்பார்ப்புக்கள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளன. ஆளும்தரப்பின் ஆதரவாளர்களே ஆளும்தரப்பை விமர்சிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஓராண்டு நிறைவிலேயே தேசிய மக்கள் சக்தி, ஜேவிபி ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது என்றார்.

# தங்காலை – சீனி மோதரவில் 3 ஆண்களின் சடலங்கள் மீட்பு

## ஆயுதங்கள், போதைப் பொருள்களும் சிக்கின

அம்பாந்தோட்டை மாவட்டம், தங்காலை - சீனிமோதர பகுதியில் சீரமைக்கப்பட்டுவரும் பழைய வீடொன்றில் இருந்து நேற்று மூன்று ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டுக்கு அருகில் இருந்த லொறிகளில் இருந்து 625 கிலோகிராம் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 245 கிலோ கிராம் ஐஸ் மற்றும் 380 கிலோ கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் 6 நவீன துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 5 பிஸ்டல் ரக துப்பாக்கிகள் மற்றும் ஒரு ரி - 56 ரக துப்பாக்கியே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விசா இன்றி இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையர்கள் குறித்து ஆராய்வு

இஸ்ரேலில் முறையான விசாக்கள் இன்றி வசிக்கும் இலங்கையர்கள் தொடர்பான விவகாரம், இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்ட நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் இரண்டாவது கூட்டத்தின் போது, அண்மையில் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான நாடாளுமன்ற மட்டத்திலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இந்த சங்கத்தின் கூட்டத்தின் போது, இந்த நிலைமை இலங்கையர்களை மாத்திரமன்றி, ஏனைய வெளிநாட்டவர்களையும் பாதிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளமைக்கமைய, இந்த விடயம் மேலதிக பரிசீலனைக்காக இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் வெளிநாட்டு தொழிலாளர்கள் தொடர்பான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அக்குழு தனது அடுத்த அமர்வில் இது குறித்து ஆராயவுள்ளது.

மேலும், இலங்கை நாடாளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு இஸ்ரேலில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவது தொடர்பிலும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில், இஸ்ரேல் - இலங்கை நட்புறவு சங்கத்தின் தலைவர் சேகா மெலாக்கு, இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் கொள்கை பிரிவின் பிரதிநிதிகள் மற்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்தின் பிரதித் தலைவர் ஹேமந்த ஏக்கநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## காற்றாலை எதிர்ப்பில் ஞாயிறன்று மன்னாரில் தீப்பந்தப் போராட்டம்

மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் ஞாயிற்றுக்கிழமை 50 ஆவது நாளை எட்டிய நிலையில் அன்றிரவு அங்கு தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் தீவினுள் காற்றாலைகள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு எதிராக மன்னார் மக்கள் குழுவின் ஏற்பாட்டில், இளைஞர் மற்றும் மன்னார் மக்கள் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தத் தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாக ஞாயிறு இரவு மக்கள் கையில் தீப் பந்தத்தை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இளையோர், பொது மக்கள் என நூற்றுக்கணக்கானோர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

## பருத்தித்துறை நவீன சந்தை நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை

பருத்தித்துறை நகரசபைக்கு சொந்த மான நவீன சந்தை கட்டடத் தொகு தியில் நடைபாதையினை ஆக்கிரமித்து இடம்பெற்று வரும் வியாபார நடவடிக் கையினை நிறுத்துவதற்கு பருத்தித் துறை நகர பிதா டக்ளஸ் போல் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்டகாலமாக நடைபாதை ஆக்கிரமிப்பு விடயம் தீர்க்கப்படாது இருந்துவரும் நிலையில், நேற்று நவீன கட்டடத் தொகுதிக்கு வருகை தந்து வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அவர்களின் துணையுடன் நடைபாதை ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நகரபிதாவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இதன்போது நகரசபை செயலாளர் மற்றும் நகரசபை உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர். இதன்போது நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றி சட்டரீதியாக வழங்கப்பட்ட இடத்திற்குள் வியாபார நடவடிக்கையினை முன்னெடுத்து ஒத்துழைப்பினை வழங்குமாறு நகர பிதாவினால் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சஷீந்திர ராஜபக்சவின் விளக்கமறியல் நீடிப்பு

ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவின் விளக்கமறியல் காலம் செப்டெம்பர் 30 நீடிக்கப்பட்டுள்ளது.

தனக்கு பிணை வழங்குமாறு கோரி சஷீந்திர ராஜபக்ச தாக்கல் செய்த மனுவும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கிரிஇப்பன்வெவ, செவனகலவில் உள்ள காணியுடன் தொடர்புடைய ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு தலைமை நீதிவான் அசங்க எஸ். போதரகம தலைமையில் இடம்பெற்ற போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மே 9, வன்முறையின்போது சஷீந்திர ராஜபக்சவுக்கு சொந்தமானது என கூறப்படும் இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான கிரிஇப்பன்வெவ, செவனகலவில் உள்ள காணி ஒன்றில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடம் ஒன்று சேதமடைந்தது. இக்கட்டடத்துக்கு இழப்பீடு வழங்க இழப்பீட்டு அலுவலகத்தால் மறுப்பு தெரிவிக்கப்பட்டபோதும், அவர் இழப்பீடு வழங்குமாறு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய 8,850,000 ரூபா (88 இலட்சம்) இழப்பீடு பெற்றுக் கொண்டமை மற்றும் மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்களை மோசடி செய்த குற்றத்தின் பேரில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார். மேற்படி வழக்கு தொடர்பான விசாரணைகள் செப்டெம்பர் 19 ஆம் திகதி முன்னெடுக்கப்பட இருந்த நிலையில், விடுமுறையின் காரணமாக கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காமையால் செப். 22 வரை வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அதற்கமைய நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்காக மன்றில் முன்னிலையாகியிருந்த சந்தேகநபரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவை செப். 30 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் தமக்கு பிணை வழங்குமாறு கோரி சஷீந்திர ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் கொழும்பு தலைமை நீதிவானால் நிராகரிக்கப்பட்டது.



## எதிர்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் கள்வர்களைக் கைது செய்வதாகக் கூறி எதிர்க்கட்சிகளின் குரலை முடக்குவதற்கு முயற்சித்தால் அதை ஏற்க முடியாது. நாம் அதற்கெதிராக தொடர்ச்சியாகக் குரல் கொடுப்போம்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம். அவர் நீதிமன்றத்தை புறக்கணிக்கக் கூடியவரா இருந்தால் மாத்திரமே அவரைக் கைது செய்யலாம். ஆனால் அவர் அவ்வாறு செயற்படவில்லை. சகல விசாரணைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார். அவ்வாறிருக்கையில் எந்தவொரு அடிப்படையும் இன்றியே அவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு ஊழல் ஒழிப்பு என்ற போர்வையில் எதிர்க்கட்சியினரை முடக்க முயற்சித்தால் அதற்கெதிராக நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம். மாறாக ஆட்சியமைப்பதற்காக நாம் ஒன்றிணையவில்லை. எமது கூட்டணி ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கானதாக இருக்கும். 2015இல் காணப்பட்டதைவிட தற்போது முற்றிலும் மாறுபட்ட நிலைமையே காணப்படுகிறது. குறிப்பிட்டவொரு கட்சிக்கான வாக்கு வங்கியொன்று தற்போது இல்லை. தற்போதைய வாக்குகள் காலத்துக்கு காலம் மாற்றமடையக் கூடியவையாகவுள்ளன.

எனவே இனி காலந்தோறும் தேசிய மக்கள் சக்தி மாத்திரமே ஆட்சியமைக்கும் என்று எண்ணிக் கொண்டிருப்பது தவறாகும். நாடு என்ற ரீதியில் அரசியலில் ஈடுபடும் உரிமை எமக்கிருக்கிறது. அந்த உரிமையை பறிப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்றார்.

## மகிந்த,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாகி முறைப்பாடளித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் இது தொடர்பில் தெரிவித்ததாவது: .

அரசியல்வாதிகளின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரங்களை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. குறித்த வெளிப்படுத்தல்கள் தொடர்பான உள்ளடக்கங்கள் குறித்து ஆளும்தரப்பின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு எதிராகவும், எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளோம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சமர்ப்பித்துள்ள சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்கள் சந்தேகத்துக்குரியதாகக் காணப்படுகின்றன. தான் சட்டத்தரணியாக பணி புரிந்து சொத்துக்களைச் சேகரித்துள்ளதாக நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ச ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை காட்டிலும் அவரிடம் அதிகளவான சொத்துக்கள் இருக்கும் என்ற சந்தேகம் காணப்படுகிறது. அவரது உறவினர்கள் அல்லது நண்பர்களின் பெயர்களிலும் அவரது சொத்துக்கள் இருக்கலாம், ஆகவே இவ்விடயம் குறித்து ஆணைக்குழு முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முறைப்பாடளித்துள்ளோம்.

இரண்டாவதாக முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சக்கு எதிராக முறைப்பாடளித்துள்ளோம். இவர் வசித்த கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அரச இல்லத்தைச் சீரமைப்பதற்கு 51 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சீரமைப்புப பணிகள் முறையான விலைமனுகோரலுடன் மேற்கொள்ளப்பட்டதா, அல்லது சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளாமல் 51 கோடி ரூபாய் பதுக்கப்பட்டதாக என்பதில் சந்தேகம் காணப்படுகிறது. ஆகவே இந்த முறைப்பாடு குறித்தும் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்சவின் மனைவியான ஷிராந்தி ராஜபக்ச 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் இல.260 டொரிங்டன் மாவத்தை கொழும்பு 07 இல் 360 இலட்சம் ரூபாவுக்கு வீடொன்றைக் கொள்வனவு செய்துள்ளார். இந்த வீட்டை கொள்வனவு செய்வதற்காக அவருக்கு 3 கோடி 60 இலட்சம் ரூபாய் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதிலும் சந்தேகம் உள்ளது.

ராஜபக்சர்கள் அரசநிதியை முறைகேடாகப் பயன்படுத்தி தங்களை வளப்படுத்தி நாட்டு மக்களை வங்குரோத்து நிலைக்கு தள்ளியள்ளார்கள். இவர்களின் சொத்துக் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு, உரிய சட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும். முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்பம் முறையற்ற சொத்து சேகரித்த விவகாரத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதைப் போன்று ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# நாகர்கோவில் மாணவர் படுகொலையின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல்கள் நேற்று

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் இலங்கை விமானப்படை மேற்கொண்ட விமானத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவச் செல்வங்களின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது.

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள, இறந்த மாணவர்களின் நினைவாலயத்தில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வட்டுவாகலில் முதியவர் வீடு மீது அதிகாலையில் புகுந்து தீ வைப்பு

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் முதியவர் ஒருவர் தனித்திருந்த வீட்டின் மீது இனந்தெரியாதநபர்கள் அதிகாலையில் பெட்ரோல் ஊற்றித் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டின் சுற்று மதில் மீது ஏறிப் பாய்ந்து வீட்டுன் முகப்புப் பகுதியல் பெட்ரோல் ஊற்றி தீ மூட்டப்பட்டுள்ளது. இதன் போது வீட்டின் முகப்பு கதவு, மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமாகியுள்ளது.

முகத்தை துணியால் மூடி கட்டியவாறு தலைக்கவசம், மழைக் கவசம் என்பனவற்றை அணிந்து வந்த மர்ம நபர்களால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நள்ளிரவில் சம்பவம் பதிவாகிய நேரம் சுதாகரித்துக்கொண்ட முதியவர் அயலவர்களை அழைத்தபோது தாக்குதல் நடத்தியோர் தப்பியோடியுள்ளனர். சம்பவ நேரம் பொலிஸாருக்கு அழைப்பெடுத்து தெரிவித்தபோதும், 4 மணிக்கே பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பல் முல்லைத் தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2025இல் வெளியிடப்பெற்றது